சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2016–2017–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் புதிதாக சேர்க்கப்படும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பாய்களுக்கு பதிலாக ஜமக்காளங்கள் வாங்கி வழங்குவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை

அரசாணை (நிலை) எண்.8

நாள் 27.01.2017
துன்முகி, தை 14
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். சி2/5456/2016, நாள் 20.09.2016.

* * * * * * * *

ஆணை:

2016–2017ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் புதிதாக சேர்க்கப்படும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பாய்களுக்கு பதிலாக ஜமக்காளங்கள் வழங்கப்படும் என்பதும் ஒன்றாகும்.

2. மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரது கடிதத்தில், தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக 226 கல்லூரி விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும், இவ்விடுதிகளில் தங்கி கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாய்களை கட்டிலின் மேல் உபயோகப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்து, இதனை தவிர்க்க, 2016–2017ஆம் கல்வியாண்டு முதல் கல்லூரி விடுதிகளில் புதிதாக சேர்க்கப்படும் மாணவர்களுக்கு பாய்களுக்கு பதிலாக கோ–ஆப்–டெக்ஸ் நிறுவனம் மூலம் ஜமக்காளங்கள் வாங்கி வழங்குவதற்கு அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து தருமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரது கருத்துருவினை நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, 226 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் 2016–2017ஆம் கல்வியாண்டில் புதிதாக சேர்க்கப்படும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பாய்களுக்கு பதிலாக கோ–ஆப்–டெக்ஸ் நிறுவனம் மூலம் ஜமக்காளங்களை வாங்கி வழங்குவதற்கும்